# பிறந்தநாள் வாழ்த்து!

16-09-2022

எஞ்சான்றும் எவ்விடத்தும் துஞ்சாமணி விளக்காய்,
அஞ்சா நெஞ்சுடனும் அகன்ற அறிவுடனும்,
பஞ்சமில் தோழமைகள் பயின்று துணை வரவும்,
நெஞ்சத்தில் நெறிகொண்டு நேரிய பார்வையுடன்,

**சஞ்சுக்தா** தான் வாழ, இந்தப் பிறந்த நாளில்,
சரித்திரம் படைத்து மண்ணில் பலவாய்,
சாதனைகள் செய்தல் வேண்டும் எனவுமாய்,
சிந்தையில் தேங்குமந்தச் சீரிய அன்பினாலே,

சுதந்திரச் சிந்தையோடு, சூரியனாய் திகழ்ந்திடவும்,
செந்தமிழில் வாழ்த்து சேர்ந்த புகழ் கொள்கவென்றே!
அன்புடன்,
பெரியப்பா, பெரியம்மா, அண்ணன்கள், அண்ணியார்,
இவர்களுடன், யாழினியும் பாட்டியும்.